# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 ஆனி மாதம்

## ஞாணச்சாரியாரின் பிறந்த நாளே! இந்துமத விடுதலைச் சிங்கங்களின் எழுச்சி நாள்!!

இந்துமதத்தின்
மறுமலர்ச்சியே
மானுடச்
செழுச்சி!



இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாணச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் ஆனி மாத வெளியீடு.**

**தலைப்பு:-** அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் பிறந்த நாளே!
இந்து வேத விடுதலை சிங்கங்களின் விழிச்சி நாள்!!
இந்து மத விடுதலை சிங்கங்களின் எழுச்சி நாள்!!!

# உள்ளுறை

1. “**இந்துவேத விடுதலைச் சிங்கங்களின் விழிச்சி நாள்**” - குருதேவர் தமது 58வது பிறந்தநாளை இந்துவேத விடுதலைச் சிங்கங்களின் விழிச்சி, எழுச்சி நாளாக அறிவித்து அனைத்து மாணுக்கர்களுக்கும் விடுத்த விளக்க அறிக்கை.
2. “**செயல்நலம் விளக்கத் திருவோலை**” - குருமார் அவர்களுக்கு அவரது செயல்நலத்தினை பாராட்டி மேலும் செயல்பட ஊக்குவித்து குருதேவர் அவர்கள் தமது 58வது பிறந்த நாளின் போது விடுத்த விரிவான மடல்.
3. “**அருளாட்சி அமைப்புத் திருவிழா**” - இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் செயல்படும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் தலைமையகத்தில் நடைபெறும் வைகாசிப் பால்குடப் பெருவிழாவிற்காக 1984இல் குருதேவர் அச்சிட்ட அறிவிக்கை.

ஓம்

# அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் பிறந்த நாளே! இந்து வேத விடுதலை சிங்கங்களின் விழிச்சி நாள்!! இந்து மத விடுதலை சிங்கங்களின் எழுச்சி நாள்!!

தலைமைப்பீடம்,
10-10-1993.

## நமது இயக்க கழக தன்னிலை விளக்கத் திருவோலை

1. நமது தலைவர், குருதேவர், தத்துவ நாயகம், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் 58வது பிறந்த நாள் விழா அறிவிக்கையாக மேற்கு மண்டல இ.ம.இ. செயலாளர், குருமார், சித்தர் காளாங்கிநாதர் இரா. வெங்கடேசனுக்கு எழுதிய அஞ்சல் எங்கும் நகல் எடுத்து அனுப்பப்பட்டு வருகின்றது. அது குருதேவரின் திருவுளக் கருத்தை தொகுக்கப்பட்டு உருவானது. அதேபோல், இப்பொழுது குருதேவரின் இன்றைய இந்துவேத இந்துமத விடுதலை சிந்தனைகள் அடிப்படையில் குருதேவரின் கருத்தோட்டங்கள், அருட்போர் வியூக நாயகம் சித்தர் யோகமுனியால் குருதேவரின் 58வது பிறந்த நாள் விழா அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது.

2. **அருட்போர் என்பது அருளுலகத்தில் உள்ள இருள்களை, தவறான கற்பனைகளை, தவறான பழக்க வழக்கங்களை காலப்போக்கில் உருவாகிவிட்ட மடமைகளை, அறியாமைகளை, புரியாமைகளை, தவறுகளை,**

**பயனற்றவைகளை, கண்மூடிப் போக்குகளை, மூட நோக்குகளை, ஏமாளிச் செயல்களை, எதார்த்த வாதங்களை, அடிமை உணர்வுகளை, அன்னிய மதங்களுக்கும், வேதங்களுக்கும் வேலியாகச் செயல்படும் கூலிநிலைகளை; நாத்திகத்தின் பேராலும், பகுத்தறிவின் பேராலும், சீர்திருத்தத்தின் பேராலும் சுயநல வெறியர்கள் செய்கின்ற இந்து வேத, இந்து மதத் துரோக விரோதச் செயல்களை; முறையான இந்து வேத, இந்து மத ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாமையால் விளைகின்ற இந்து மதப் போலி வாழ்வியல்களை; சாதி சமய ஏற்றத்தாழ்வு வெறிகளாலும், தீண்டாமைக் கொடுமைகளாலும் இந்துக்களிடையே ஏற்பட்டிட்ட ஒற்றுமையின்மைகளை, போட்டாப் போட்டிகளை, சண்டை சச்சரவுகளை; கலக்கங்களை, கவலைகளை, இழிவுகளை, அழிவுகளை;... ... எல்லாம் அகற்றுவதற்காக; இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்! இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்! இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்!; இந்துக்களிடையில் நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்!.... என்ற பேருண்மையினை முதலில், முதலில், முதலில் நம்மவர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்!; நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்!**

ஏனெனில், நம்மவர்களில் பலர் நாம் திரட்டுகின்ற அருட்படை, அருட்சேனை வேற்று மதங்களோடும், மாற்று வேதங்களோடும் போராடிடப் போகிறது! போரிடப் போகிறது!? போராடிடப் போகிறது! போரிடப் போகிறது!? போராடிடப் போகிறது! போரிடப் போகிறது!? என்ற தவறான உணர்விலும், கருத்திலும், நோக்கிலும், போக்கிலும், ஊக்கிலும் வாழுகிறார்கள்! வாழுகிறார்கள்! வாழுகிறார்கள்! இந்த மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும்! இந்த

மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும்! இந்த மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும்! இதற்காகத்தான், இதற்காகத்தான், இதற்காகத்தான் நமது குருதேவரின் அருளாணை பெற்ற குருவாணையால் அருட்போர் வியூக நாயகம், யோகமுனியாகிய யாம், இந்த நமது இயக்க கழகத் தன்னிலை விளக்கத் திருவோலையை எழுத நேரிட்டுள்ளது! எழுத நேரிட்டுள்ளது! எழுத நேரிட்டுள்ளது!

எனவே, எனவே, எனவே, இத்திருவோலைக்குரிய பயன் விளையும் வண்ணம், இத்திருவோலை பெறுகின்ற ஒவ்வொருவரும் தங்களால் முடிந்தவரை இத்திருவோலைக்கு குறைந்தது எட்டு (8) நகல்களாவது (கார்பன் பேப்பர் நகல்களாகவோ அல்லது பேனா நகல்களாகவோ) விரைந்து தயாரித்து தலைமைப் பீடத்திற்கு அனுப்ப வேண்டும், அனுப்ப வேண்டும், அனுப்ப வேண்டும். இதுதான், உங்களின் இந்த அஞ்சல்களின் நகல்கள்தான் குருபீடத்தின் திருவடிகளில் நீங்கள் பூசைக்காகத் தூவுகின்ற மலர்கள்.

மேலும், குருபீடத்திற்கு நீங்கள் ஏதாவது, படையல் படைக்க விரும்பினால் குருமார் வெங்கடேசனுக்காக எழுதியனுப்பப்பட்ட அஞ்சலுக்கும் இதுபோல் குறைந்தது எட்டு நகல்கள் எடுத்து அனுப்புங்கள். அப்பொழுதுதான், அவை இரண்டிலும் உள்ள கருத்துக்கள், செய்திகள் உங்களுடைய நெஞ்சத்திலும், சிந்தையிலும், உள்ளத்திலும், உணர்விலும், செயலிலும் ஆழப் பதிந்து நிலையாக வாழ்ந்து; உங்களுடைய செயல்களில் எதிர்பார்க்கப்படுகின்ற தரங்களையும், திரங்களையும், திறங்களையும் விளைவித்திடும், விளைவித்திடும், விளைவித்திடும்; உருவாக்கிடும், உருவாக்கிடும், உருவாக்கிடும். இதை உணர்ந்து செயல்படுக! இதை உணர்ந்து செயல்படுக! இதை உணர்ந்து செயல்படுக!

3. நம்மவர்களில் நெடுங்காலமாகத் தயாராகி இருக்கக் கூடிய மூத்த சன்னிதானங்கள் கூட குருதேவர் தங்களை விமர்சிக்கக் கூடாது, தங்களுடைய குறைகளைச் சுட்டிக்காட்டக் கூடாது, தங்களைத்

திட்டக் கூடாது, தங்களைத் திருத்த முற்படக் கூடாது, தங்களுடைய பக்குவத்தைத் தட்டிப் பார்க்கக் கூடாது... ... என்று, என்று, என்று முட்டாள்தனமாக, பைத்தியக்காரத்தனமாக, சிறுபிள்ளைத்தனமாக எதிர்பார்க்கிறார்கள், எதிர்பார்க்கிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். இந்தத் தவறான உணர்வு நிலை, கருத்து நிலை, விருப்ப நிலை, எதிர்பார்ப்பு நிலை இனியும் நம்மவர்களுக்கிடையில் இருக்கக் கூடாது! இருக்கக் கூடாது! இருக்கக் கூடாது! என்பதற்காகத்தான் அருட்போர் வியூக நாயகமாக உள்ள சித்தர் யோகமுனியான சித்தரடியார் வேம்பை சீ. மணி இந்த அஞ்சலை எழுதுகிறோம், எழுதுகிறோம், எழுதுகிறோம். இதை யாரும் எமது தனிப்பட்ட அகம்பாவ, ஆணவ, எதேச்சாதிகாரப் போக்காகவோ, நோக்காகவோ கருத வேண்டாம், கருத வேண்டாம், கருத வேண்டாம், கருதவே வேண்டாம்.... .... என்று மிக மிக தாழ்மையோடும், பணிவோடும் வேண்டிக் கொள்கிறோம்! என்று மிகமிகத் தாழ்மையோடும் பணிவோடும் வேண்டிக் கொள்கிறோம்! என்று மிகமிகத் தாழ்மையோடும் பணிவோடும் வேண்டிக் கொள்கிறோம்! ஏனென்றால், ஏனென்றால், ஏனென்றால், யாம், தலைமைப்பீட அலுவலகத்தில் பணியாற்றுவதால் நமது அடியார்களுக்கு எல்லாம் அடியாராக, நமது தொண்டர்களுக்கு எல்லாம் தொண்டராகவே செயல்பட விரும்புகிறோம், விரும்புகிறோம், விரும்புகிறோம்!

4. நமது குருதேவர் சுமார் 3000, 4000 புத்தகங்கள் அச்சிடுகின்ற அளவிற்கு எழுதிக் குவித்துள்ள கோப்புக்களில் உள்ள தாள்கள் நைந்தும், எழுத்துக்கள் மங்கியும் வருகின்றன. இவற்றைப் புதிய தாள்களில் நகல் எடுக்கவோ! அல்லது புதிய கோப்புக்களில் மாற்றி வைத்திடவோ! அல்லது அச்சிடவோ! தேவையான உடல் உழைப்பை நல்கக் கூடியவர்களோ! அல்லது பொருளாதார வசதி வாய்ப்புக்களை நன்கொடையாக அளிக்கக் கூடியவர்களோ! அநேகமாக நம்மவர்களுக்கிடையில் சிலர் கூடத் தேவையான பக்குவத்திற்கு வரவில்லை! வரவில்லை! வரவில்லை! வரவேயில்லை! தயாராகவில்லை! தயாராகவில்லை! தயாராகவில்லை! தயாராகவே இல்லை!

இன்னும் சொல்லப் போனுல், குருபீடத்திற்கு அன்ருடம் வரக் கூடியவர்களுக்கு தொடர்ந்து ஒரு குவளை சுவைநீர் வழங்குவதற்குக் கூட நிலையாக வசதி வாய்ப்புக்கள் நமது திருமடத்திற்கு இன்னும் உருவாகவில்லை! உருவாகவில்லை! உருவாகவில்லை! உருவாகவேயில்லை! உருவாக்கப் படவில்லை! உருவாக்கப் படவில்லை! உருவாக்கப் படவில்லை! உருவாக்கவே படவேயில்லை! என்பதுதான் உண்மை. இந்த உண்மையை எண்ணிப் பார்க்க இயலாமல் நம்மவர்களில் பலர், குருதேவரோடு தங்கி குருதேவரின் அருகிலேயே ஒரு சில நாட்கள் இருந்து குருதேவரின் திருவருளேயும், அருளுரையையும், அறிவுரையையும், அருளார்ந்த அறிவுரையையும், அறிவார்ந்த அருளுரையையும் துய்த்து மகிழ முடியவில்லையே! துய்த்து மகிழ முடியவில்லையே! துய்த்து மகிழ முடியவில்லையே! துய்த்து மகிழவே முடியவில்லையே! என்று புலம்புகிருர்கள், என்று புலம்புகிருர்கள், என்று புலம்புகிருர்கள்! இதுபற்றி, ஆங்காங்கே உள்ள நமது சன்னிதானங்கள் ஒன்று கூடி கலந்து பேசி முடிவெடுத்து உருப்படியாக ஏதாவது செய்தால் நல்லது, ஏதாவது செய்தால் நல்லது, ஏதாவது செய்தால் நல்லது.

5. நமது குருதேவர், நம்மவர்களில் யாரும் தம் பொருட்டோ, அல்லது நமது நிறுவன நிருவாகங்களின் பொருட்டோ, எந்தவொரு பெரிய தியாகத்தையும் செய்யத் தேவையில்லை, செய்யத் தேவையில்லை, செய்யத் தேவையில்லை என்றும்; யாரும் குருபீடத்தின் பொருட்டோ, குருவாணைகளேச் செயலாக்குவதன் பொருட்டோ கடனுளியாகிவிடக் கூடாது, கடனுளியாகி விடக் கூடாது, கடனுளியாகி விடக் கூடாது என்றும்; நம்மவர்களில் யாரும் நமது கொள்கைகளுக்காகவும், குறிக்கோள்களுக்காகவும், செயல்திட்டங்களுக்காகவும் தங்களுடைய குடும்பப் பொறுப்புக்களேயோ, கடமைகளேயோ சிதைத்துக் கொள்ளக் கூடாது, சிதைத்துக் கொள்ளக் கூடாது, சிதைத்துக் கொள்ளக் கூடாது, சிதைத்துக் கொள்ளவே கூடாது என்றும்; நம்மவர்களில் எந்தவொரு தனிமனிதரும் நமது வளர்ச்சிக்காகத் தங்களே நலிவுக்கும்,

மெலிவுக்கும், தளர்ச்சிக்கும், அயர்ச்சிக்கும், பிற பாதிப்புக்களுக்கும் உரியவர்களாக்கிக் கொள்ளக் கூடாது! உரியவர்களாக்கிக் கொள்ளக் கூடாது! உரியவர்களாக்கிக் கொள்ளக் கூடாது! உரியவர்களாக்கிக் கொள்ளவே கூடாது என்றும்; ... ... மிகமிகத் தெளிவாக, திட்டவட்டமாக, கண்டிப்பாக எச்சரிக்கை அறிவிப்பு விடுத்தும்! எச்சரிக்கை அறிவிப்பு விடுத்தும்! எச்சரிக்கை அறிவிப்பு விடுத்தும்!; "நம்மவர்களில் கணிசமானவர்கள் அடிக்கடி ... அடிக்கடி .... திடீர் திடீரென்று ... காரண காரியமின்றி ... குருபீடத்திலிருந்து ஒதுங்கியும், பதுங்கியும், விலகியும்; ஒதுங்கியும், பதுங்கியும், விலகியும்; ஒதுங்கியும், பதுங்கியும், விலகியும் ... செயல்பட்டு விடுகிறார்கள், செயல்பட்டு விடுகிறார்கள், செயல்பட்டு விடுகிறார்கள்."

இது குறித்துத்தான், இது குறித்துத்தான், இது குறித்துத்தான் நான்கு யுக நாயகமாக, பரபிறம்மமாக, எல்லாம் வல்ல சித்தராக, இந்துவேத நாயகமாக, இந்துமதத் தந்தையாக, அண்டபேரண்ட அநாதிஆதி சத்திகள் சன்னிதானமாக, அநாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளாராக, கருமூலப் பண்டாரமாக, கருகுல ஆதீனமாக, குவலய குருபீடமாக திருத்தோற்றம் பெற்றுள்ள நமது குருதேவர் குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் வருத்தப்பட நேரிட்டுள்ளது! வருத்தப்பட நேரிட்டுள்ளது! வருத்தப்பட நேரிட்டுள்ளது! இந்த வருத்தத்தை நாமெல்லாம் நமது குருதேவருக்கு இந்த 58வது பிறந்த நாள் விழா முதற்கொண்டாவது ஏற்படாமல் செய்ய வேண்டும், ஏற்படாமல் செய்ய வேண்டும், ஏற்படாமல் செய்ய வேண்டும். இதுதான், தலைமைப்பீடத்து அலுவலகப் பணியாளனாக இருக்கின்ற அருட்போர் வியூக நாயகமான அடியேன் சித்தர் யோகமுனியின் வேண்டுகோள்! வேண்டுகோள்! வேண்டுகோள்!

6. நமது குருதேவர் ஆன்மீக நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்துச் செயல்பட்ட போதிலும், அரசியல் நிறுவன நிர்வாகங்களை விடக் கடுமையாகவும், மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும், தமது

நிறுவன நிர்வாகங்களில் பங்கு பெறுபவர்களில் யார் யார் என்னென்ன அக உணர்வுகளையும், புற அறிவுகளையும், செயல் தர திர திறங்களையும், கற்பனைகளையும், மமதைகளையும், மேம்போக்குகளையும், பொறுப்பு உற்ற நிலைகளையும், பொறுப்பு அற்ற நிலைகளையும் பெற்றுத் திகழ்கிறார்கள், பெற்றுத் திகழ்கிறார்கள், பெற்றுத் திகழ்கிறார்கள் என்பதை உற்று நோக்கி உய்த்துணர்ந்து உரிய காலக் கட்டங்களில் தனியாகவும், பலர் முன்னிலையில் வாய்ச்சொல்லாக கண்டித்தும், அஞ்சல் வடிவில் விமர்சித்தும், திருத்த முற்பட்டு! திருத்த முற்பட்டு! திருத்த முற்பட்டு! .... திருந்தாதவர்களை! திருந்தாதவர்களை! திருந்தாதவர்களை! .... திருத்தப்பட முடியாதவர்களை! திருத்தப்பட முடியாதவர்களை! திருத்தப்பட முடியாதவர்களை! அருளுலக ஒப்புதலோடு கண்டித்து, அனைத்து விதமான நிறுவன நிர்வாகத் தொடர்புகளில் இருந்தும் துண்டித்து; வெட்டி விலக்கி விட்டு விடுகிறார், வெட்டி விலக்கி விட்டு விடுகிறார், வெட்டி விலக்கி விட்டு விடுகிறார். குருதேவரின் இச் செயல்பாட்டினை நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை! இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை! இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை!

அதாவது, நமது குருபாரம்பரியத்தில் "**குருதேவரின் அடியார்கள் குரங்குக் குட்டி தன் தாயின் அடிவயிற்றை கெட்டியாகப் பிடித்துக் கொள்வது போல், குருதேவரோடு ஒட்டியே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்! குருதேவரோடு ஒட்டியே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்! குருதேவரோடு ஒட்டியே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்!**" என்று கூறுவதை மட்டுமே இங்கு யாம் எடுத்துக் கூற விரும்புகிறோம். இக் குருபாரம்பரியத்தின் மூலம் நம்மவர்கள் நமது குருதேவரின் கண்டிப்புக்களையும், தண்டிப்புக்களையும் எப்படியெப்படி ஏற்றுச் சமாளிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

7. **'கல்லில் சந்தனக் கட்டை வைத்துத் தேய்ப்பது போல்'** ஒவ்வொரு அடியாரும் குருதேவரின் செயல்திட்டங்களை செயலாக்குவதில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்! ஈடுபடுத்திக்

கொள்ள வேண்டும்! ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்! ஈடுபடுத்திக் கொண்டேயாக வேண்டும். அப்பொழுதுதான், அப்பொழுதுதான், அப்பொழுதுதான், நாம் இந்துவேத விடுதலை இயக்கத்தின் சிங்கங்களாக! இந்துமத விடுதலை இயக்கத்தின் சிங்கங்களாக! இந்துக்களின் விடுதலை இயக்கத்தின் சிங்கங்களாக! பொதுவாக ஆத்திக விடுதலை இயக்கத்தின் சிங்கங்களாக! வாழ்ந்திட முடியும்! வாழ்ந்திட முடியும்! வாழ்ந்திட முடியும்!

இதற்குரிய செயல்திட்டமாக நமது அண்டபேரண்ட அருட்பேரரசர், நமது பேராசான், நமது தத்துவ போதகர், நமது செயல் சித்தாந்தப் பயிற்றுசிரியர், நமது தலைவர், தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், அருளாட்சி நாயகம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் அருளாணை பெற்ற குருவாணையாக நம்மவர்கள் i) அன்றாடப் பூசைமொழி நூல், சிறிய புத்தகம், ii) கடவுள் மொழி தெய்வ மொழி, தேவ மொழி, வேத மொழி சிறிய புத்தகம், iii) இந்துவேத மாநாட்டில் வெளியிட்ட இந்துவேதம் முதல் புத்தகம், iv) இப்பொழுது வெளியிட்டுள்ள சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடு எனும் நான்கு நூல்களையும், நான்கு புத்தகங்களையும் மட்டும் நம்மவர்கள் அனைவருமே ஒரு சில மாதங்களுக்குள் முழுமையாக மனப்பாடம் செய்தாக வேண்டும்! முழுமையாக மனப்பாடம் செய்தாக வேண்டும்! முழுமையாக மனப்பாடம் செய்தாக வேண்டும்! மனப்பாடம் செய்தேயாக வேண்டும்! என்ற அறிவிப்பு வழங்கப்படுகிறது, அறிவிப்பு வழங்கப்படுகிறது, அறிவிப்பு வழங்கப்படுகிறது.

இதன்படி, நம்மவர்கள் அனைவரும் மேற்படி நான்கு புத்தகங்களையும் நன்கு ஊன்றிப் படித்து மனப்பாடம் செய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதையே நமது குருதேவரின் 58வது பிறந்தநாள் விழாவில் எடுத்துக் கொள்ளும் வீர சபதமாக ஆக்கிக் கொள்ள வேண்டும், வீர சபதமாக ஆக்கிக் கொள்ள வேண்டும், வீர சபதமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

8. இந்த கலியுகத்தில், இந்த நூற்றுண்டில் நம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடாக, **'மதம் என்றுல் என்னவென்றே தெரியாத அரசியல்வாதிகள்; மதத்தைப் பற்றிய விமர்சனங்களேயும், விவாதங்களேயும், விளக்கங்களேயும், விடிவு முடிவு பிறச்சினேகளேயும் எழுப்புகிருர்கள், எழுப்புகிருர்கள், எழுப்புகிருர்கள், எழுப்பி வருகிருர்கள்**. இதுதான் பெரிய சோதனே, இதுதான் பெரிய சோதனே, இதுதான் பெரிய சோதனே; இதுதான் தாங்க முடியாத வேதனே, இதுதான் தாங்க முடியாத வேதனே, இதுதான் தாங்க முடியாத வேதனே.

ஏனென்றுல், ஏனென்றுல், ஏனென்றுல்!... நம் தாய்த்திரு நாட்டைப் பொறுத்தவரை அநேகமாக நமது அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் அல்லது ஏறத்தாழ எல்லோரும் மத உலகைப் பொறுத்தவரை பிறவிக் குருடர்களே, பிறவிக் குருடர்களே, பிறவிக் குருடர்களே, பிறவிக் குருடர்களே ஆவார்கள். எனவேதான், இந்தப் பிறவிக் குருடர்கள் வழிகாட்டிகளாக, வழித்துணேகளாக மதத்துறையில் செயல்படுவது, செயல்பட முற்படுவது பொறுத்துக் கொள்ள முடியாத சோதனேயாகவும், தாங்கிக் கொள்ள முடியாத வேதனேயாகவும் இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது.

இதுபற்றி, இந்து மதத்துக்கென இருக்கின்ற அரசியல் நிறுவன நிர்வாகங்களும், சமுதாய நிறுவன நிர்வாகங்களும், சமய நிறுவன நிர்வாகங்களும், இலக்கிய நிறுவன நிர்வாகங்களும், கலே நிறுவன நிர்வாகங்களும், உலகப் பொதுவான வேதாந்த சித்தாந்த தத்துவ நிறுவன நிர்வாகங்களும் துணிவோடு எந்தவொரு முடிவும் எடுத்திட முடியாமல் கை பிசைந்து, கண்கலங்கி, வாய்புலம்பி, தேங்கி, தேம்பிப் புலம்புகின்றன! தேங்கி, தேம்பிப் புலம்புகின்றன! தேங்கி, தேம்பிப் புலம்புகின்றன!

இப்படிப்பட்ட மந்த நிலேயை, மந்த நிலேயை, மந்த நிலேயை; கலவரம் மிக்க தேக்க நிலேயை, கலவரம் மிக்க தேக்க நிலேயை,

கலவரம் மிக்க தேக்க நிலையை இந்த நாட்டுக்கு வந்துள்ள மாற்று வேதங்களும், வேற்று மதங்களும் தங்களுடைய புதிய வெறி நிறைந்த வளர்ச்சிக்கு சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன, சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன, சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன.

அதாவது, அதாவது, அதாவது, நம் தாய்த்திரு நாட்டில் வாழ்பவர்களுக்கிடையில் எவ்வித மத உணர்வும் இல்லாத காலிகளையும், மேம்போக்காக மத வாழ்வு வாழுகின்ற போலிகளையும்; நாத்திக வாதமும், பகுத்தறிவு வாதமும், சீர்திருத்த வாதமும் மேம்போக்காக பேசித் திரிகின்ற நமது இந்துமத இந்துவேதத் துரோகிகளையும், விரோதிகளையும்; மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும் கூலி கொடுத்து தங்களுக்குரிய வேலிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், வேலிகளாக பயன்படுத்திக் கொள்கிறார்கள், வேலிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

எனவேதான், எனவேதான், எனவேதான், நம் நாட்டில் எந்த விதமான கொள்கையோ, குறிக்கோளோ, செயல்திட்டமோ தனக்கென்று வளர்த்துக் கொள்ளாத அல்லது வைத்துக் கொள்ளாத அரசியல் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், மன்றங்களுமே அதிக அளவில் இருக்கின்றன, அதிக அளவில் இருக்கின்றன, அதிக அளவில் இருக்கின்றன. இதனால்தான் புகழ் வெறியும், பொருள் வெறியும், பதவி மோகமும், அதிகார ஆசையும், அகம்பாவப் போக்கும், ஆணவ நோக்கும், தானென்ற வீம்பும், வம்பும் அதிகமாக உடைய அரசியல் தலைவர்களே! அதிகமாக உடைய அரசியல் தலைவர்களே! அதிகமாக உடைய அரசியல் தலைவர்களே! வெற்றி பெற்றவர்களாக இருக்கிறார்கள், வெற்றி பெற்றவர்களாக இருக்கிறார்கள், வெற்றி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

அதாவது, அதாவது, அதாவது, நமது அரசியல் தலைவர்களில் பெரும்பாலானவர்கள், **'தாய்ப் பாலுக்கு விலை பேசுகின்ற வீணர்களைப் போல தரம் கெட்டு, திரங் கெட்டு, திறங் கெட்டு, தீரங் கெட்டு,**

**<u>வீரங் கெட்டு, உரங் கெட்டு, அறங் கெட்டு, மறங் கெட்டு, சோரம் போனவர்களைப் போல்; நம் தாய்த் திருநாட்டு மதத்தை அன்னிய மதத்தவர்களுக்குக் காட்டிக் கொடுப்பவர்களாக, விட்டுக் கொடுப்பவர்களாக, கூட்டிக் கொடுப்பவர்களாக அறிவு கெட்டு வாழுகிறார்கள், அறிவு கெட்டு வாழுகிறார்கள், அறிவு கெட்டு வாழுகிறார்கள்'.</u>**

எனவேதான், எனவேதான், எனவேதான் நம்மிடம் மெய்யான, தூய்மையான, வாய்மையான, துணிவான, தரம் மிக்க, திரம் மிக்க, திறம் மிக்க, தீரம் மிக்க, வீரம் மிக்க, உரம் மிக்க, அறம் மிக்க, மறம் மிக்க குருபத்தி உள்ளவர்கள், இந்துவேதப் பற்றுடையவர்கள், இந்துவேதப் பற்றுடையவர்கள், இந்துவேதப் பற்றுடையவர்கள், இந்துமத நம்பிக்கையுள்ளவர்கள், இந்துமத நம்பிக்கையுள்ளவர்கள், இந்துமத நம்பிக்கையுள்ளவர்கள்; அனைவரும் இந்த நொடி முதல், இந்த அஞ்சல் கண்டது முதல் குருதேவரின் 58வது பிறந்த நாள் விழாவின் உறுதிமொழியாக 'இந்துவேத விடுதலைச் சிங்கங்களாக, இந்துமத விடுதலைச் சிங்கங்களாக செயல்பட உறுதி மேற்கொள்ள வேண்டும்! உறுதி மேற்கொள்ள வேண்டும்! உறுதி மேற்கொள்ள வேண்டும்!

9. அதாவது, அதாவது, அதாவது இந்த 6-10-93 முதல் 10-10-93 வரை தொடர்ந்து கடந்த ஐந்து (5) நாட்களையும் குருதேவரின் 58வது பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடியதன் பயனாக; நாம் எல்லோரும் இந்துவேத விடுதலைச் சிங்கங்களாக இருக்கிறோம். நாம் எல்லோரும் இந்துமத விடுதலைச் சிங்கங்களாக இருக்கிறோம். எனவே! எனவே! எனவே! இந்த நொடி முதல் நாம் ஒவ்வொருவரும் நமது ஒவ்வொரு நொடிப் பொழுதையும் இந்துவேத விடுதலைச் சிங்கங்களையும், இந்துமத விடுதலைச் சிங்கங்களையும் எப்படி உருவாக்க வேண்டும்! எப்படியெப்படி உருவாக்க வேண்டும்! எப்படி உருவாக்க வேண்டும்! எப்படியெப்படி உருவாக்க வேண்டும்! எப்படி உருவாக்க வேண்டும்! எப்படியெப்படி உருவாக்க வேண்டும்! என்ற நினைப்பும்,

செயலும் உடையவர்களாக ஆகிடுவோம்! என்ற நினைப்பும், செயலும் உடையவர்களாக ஆகிடுவோம்! என்ற நினைப்பும், செயலும் உடையவர்களாக ஆகிடுவோம்!

அப்பொழுதுதான், அப்பொழுதுதான், அப்பொழுதுதான் மதத் துறைகளைப் பற்றி முடிவு எடுக்கும் அரசியல்வாதிகளின் முடிவுகளைப் பற்றி முடிவு எடுக்கும் உரிமை இந்துவேத ஆச்சாரியார்களின் கைகளுக்கு, இந்துமத குருபீடங்களின் கைகளுக்கு வந்திடும், வந்திடும், வந்திடும். அதாவது, அதாவது, அதாவது, 'மதத்துறையே அரசியல் துறைக்கு தலைமை தாங்கும்'; 'மதத்துறையின் ஆச்சாரியார்களும், குருதேவர்களும், மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், சன்னிதானங்களும், ஆதீனங்களும்தான் இத்திருநாட்டிற்கு எவ்விதமான பண்பாட்டு பாதிப்போ, நாகரிக சிதைவோ, பொருளாதார இழப்போ, உரிமைக் குறைவோ ஏற்படாத அரசியலை உருவாக்க முடியும், உருவாக்க முடியும், உருவாக்க முடியும்'.

எனவே, எனவே, எனவே, இனிமேல், நாம் நமது சமயக் கோட்பாடுகளிலும், கொள்கைகளிலும், குறிக்கோள்களிலும், தத்துவங்களிலும், சித்தாந்தங்களிலும், வேதாந்தங்களிலும், வரலாறுகளிலும், இலக்கியங்களிலும் செலவிடுகின்ற அதே கால அளவினை; நமது சமுதாய அரசியல் கொள்கைகளிலும், குறிக்கோள்களிலும், தத்துவங்களிலும், சித்தாந்தங்களிலும், வேதாந்தங்களிலும், வரலாறுகளிலும், இலக்கியங்களிலும் செலவிட வேண்டும், செலவிட வேண்டும், செலவிட வேண்டும்.

எனவே, இந்த திருவோலையை 'இந்துவேத விடுதலை சிங்க விழிச்சி முழக்கமாக'! 'இந்துமத விடுதலை சிங்க எழுச்சி முழக்கமாக!' ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! கற்றிடுக! கற்றிடுக! கற்றிடுக! உற்றிடுக! உற்றிடுக! உற்றிடுக! நோற்றிடுக! நோற்றிடுக! நோற்றிடுக!..... .... ....

நாளை நமதே! வெற்றி நமதே!

நாளை நமதே! வெற்றி நமதே!
நாளை நமதே! வெற்றி நமதே!

இந்து வேதம் வளர்ப்போம்! இந்து மதம் காப்போம்!
இந்துக்களை ஒற்றுமைப் படுத்துவோம்!

இந்து வேதம் வளர்ப்போம்! இந்து மதம் காப்போம்!
இந்துக்களை ஒற்றுமைப் படுத்துவோம்!

இந்து வேதம் வளர்ப்போம்! இந்து மதம் காப்போம்!
இந்துக்களை ஒற்றுமைப் படுத்துவோம்!

ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

ஓம் அர அற நமப் பார்வதி பாதமே போற்றி!
ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!

ஓம் அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
ஓம் தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

ஓம் எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே!
ஓம் எல்லாம் வல்லான் தனையே ஏத்து!

ஓம் புத்தம் கச்சாமி!
ஓம் சங்கம் கச்சாமி!
ஓம் சரணம் கச்சாமி!
ஓம் தருமம் கச்சாமி!
ஓம் உருவம் கச்சாமி!

ஓம் புத்தம் சரணம் கச்சாமி!
ஓம் சங்கம் சரணம் கச்சாமி!
ஓம் தருமம் சரணம் கச்சாமி!
ஓம் உருவம் சரணம் கச்சாமி!

ஓம் புத்தம், சங்கம், சரணம், தருமம், உருவம் கச்சாமி!

ஓம் குரு வாழ்க!
ஓம் குருவே துணே!
ஓம் குருவே எல்லாம்!
ஓம் குருவே போற்றி!
ஓம் குருவே சரணம்!

ஓம் குருவே அனைத்துக்கும் விழியாக இருக்கின்றார்!
ஓம் குருவே அனைத்துக்கும் வழியாக இருக்கின்றார்!
ஓம் குருவே அனைத்துக்கும் வழிகாட்டியாக இருக்கின்றார்!
ஓம் குருவே அனைத்துக்கும் வழித்துணையாக இருக்கின்றார்!
ஓம் குருவே அனைத்துக்கும் வழிப்பயனாக இருக்கின்றார்!

ஓம் நமசிவாய போற்றி!
ஓம் நமச்சிவாய போற்றி!
ஓம் சிவாயநம போற்றி!
ஓம் பராசத்தி போற்றி!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

அன்பு
**பதினெண்சித்தர் மடம்,**
**தலைமைப்பீட அலுவலகப் பணியாளர்,**
**சித்தர் யோகமுனி,**
**வேம்பை சீ. மணி.**

**//உண்மை நகல்//**
**//மூல நகல்: அஞ்சலக முத்திரையுடன் இருந்த தட்டச்சுப் பிறதியின் நகல்.//**

ஓம் குருவே துணை!

# செயல்நலம் விளக்கத் திருவோலை

பொன்னேரி,
30-09-93.

அன்பு மகன், குருமார், சித்தர் காளாங்கிநாதர், அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம் இரா. வெங்கடேசனுக்கு உன்னுடைய ஞானத் தந்தை, ஏற்புத் தந்தை, அன்புத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, தலைவர் (இ.ம.இ., இ.மு.க., அ.வி.தி.) விடுத்துக் கொள்ளும் செயல்நலம் விளக்கத் திருவோலை.

1) அன்பு மகனே! அடுப்பில் இருக்கும் பால் பொங்கி அடங்குவது நொடிப் பொழுதில் நிகழும். அதாவது, பொங்கி வருகின்ற பால் அடுப்பிலிருந்து எடுத்தவுடன் பொங்குவது அடங்கி விடும். அதுபோல், உன்னுடைய உணர்வுப் பொங்கல் சில நொடிச் சிந்தனையால் அடங்கி விட்டது. இந்த நிலைதான் உன்னுடைய நிலை! உன்னுடைய இந்தச் சொந்த நிலையால்தான் அடிக்கடி மந்த நிலைகள் உன்னிடம் ஏற்படுகின்றன.

ஆனால், ஒரு மாபெரும் உலகத் தொன்மைமிகு பழம்பெரும் இனத்தின் மொழி விடுதலை, இன விடுதலை, நாட்டு விடுதலை, வேத மத விடுதலை, ... முதலிய பலவகைப்பட்ட விடுதலைக்காக போராடுகின்ற 2000 ஆண்டுப் பழமையுடைய ஓர் இயக்கத்தின் ஒரு மாபெரும் மண்டலத்தின் செயலாளராக இருக்கின்ற நீ, இப்படியெல்லாம் திடீர்

திடீரென்று உணர்வு வயப்படுபவனாக இருக்கக் கூடாது. இருக்கக் கூடாது, இருக்கக் கூடாது, இருக்கவே கூடாது என்பதைத் தெரிந்து கொள், புரிந்து கொள்; தெரிந்து கொள், புரிந்து கொள்; தெரிந்து கொள், புரிந்து கொள்.

2. அன்பு மகனே, என்னைச் சுற்றியுள்ள, என் தலைமையின் கீழுள்ள, என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிற அடியவர்களில் பெரும்பாலானவர்கள் என்னை உலகியலாகவும் முழுமையாக உணரவில்லை; அருளியலாகவும் உணரவில்லை. அதாவது, 500 கோடி ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பாரம்பரியத்தை உடைய யாம்; அருளியலாக முக்காலத்தையும் உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படும் வல்லமை பெற்று இருந்தும் அப்படிச் செயல்படுவதில்லை. உலகியலாக எல்லாவகையான துறைகளிலும் முழுமையான தேர்ச்சி பெற்று; எதையுமே ஆரம்பம் முதல் முடிவு வரை, நொடிப்பொழுதில் உய்த்துணரும் ஆற்றல் பெற்றிருந்தும் அதன்படியும் செயல்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவே இல்லை. ஆனால், யாம் எதையுமே, எப்பொழுதும், எப்படியும் நொடிப்பொழுதில் முழுமையாக உணர்ந்து முறையாகவும், நிறைவாகவும் செய்து முடிக்கும் வல்லமையைப் பெற்றுத் திகழுகிறோம் என்ற உண்மையை நன்கு புரிந்தவர்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு நம்மவர்களுக்குள் இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்பதால்தான் எமக்கு உலகியல் வாழ்க்கை இன்னும் இருக்கிறது, இருக்கிறது, இருக்கிறது. இதைப் புரிந்து கொள். இதுபற்றித் தொடர்ந்து சிந்தித்திடு, பிறரையும் சிந்திக்கச் செய்திடு.

3. நான் ஆரம்பக் காலத்திலிருந்து **“யாரும் எனக்காக மிகப்பெரிய தியாகத்தையோ, வீரதீரச் செயல்களையோ செய்யத் தேவை இல்லை; இன்னும் சொல்லப்போனால், யாரும் எனக்காக கடனாளி ஆகிவிடக்**

**<u>கூடாது; தங்களது வாழ்க்கைச் சூழ்நிலைகளைச் சிதைத்துச் சீரழித்துப் பாழாக்கி விடக்கூடாது. தங்களுடைய குடும்பக் கடமைகளை உரிய அளவாவது தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். யாரும் தங்களுடைய குடும்பச் சூழல், உற்றார் உறவினரின் சூழல், ஊராரின் சூழல் முதலியவற்றைக் கண்மூடித்தனமாக எதிர்த்தோ, மறுத்தோ, வெறுத்தோ செயல்பட்டு விடக்கூடாது, செயல்பட்டு விடக் கூடாது, செயல்பட்டு விடக் கூடாது, செயல்பட்டு விடவே கூடாது!...</u>**" என்று திட்டவட்டமாக அறிவித்தே வருகிறோம், திட்டவட்டமாக அறிவித்தே வருகிறோம், திட்டவட்டமாக அறிவித்தே வருகிறோம். இந்த உண்மையை உன்னைப் போன்ற படித்த இளைஞர்கள் கூட்டம் புரிந்து கொள்ளாமல் செயல்படுவதுதான் எமக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது, எமக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது, எமக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது.

அதாவது, உன்னை விட, "<u>தன்னுடைய பெண்டாட்டி பிள்ளைகள் எல்லாம் செத்துத் தொலையட்டும்; உலகியல் பந்த பாசங்கள் எல்லாம் அற்றும், இற்றும் போகட்டும். உடனடியாகவும், என்றென்றைக்கும், குருதேவருக்குள் நானும், தனக்குள் குருதேவரும் என்ற நிலை கிடைத்தால் போதும், அதுதான் பிறவிப் பயன்</u>" என்று குதித்துக் கொதித்தவர்களும், கொதித்துக் குதித்தவர்களும் கூட தானென்ற அகம்பாவம், ஆணவம், வம்பு, வீம்பு, புகழாசை, பொருள் செருக்கு, அதிகார மோகம், உலகியல் இன்பம், ... முதலியவற்றால் குருதேவரை 'நலமாக இருக்கின்றாரா?' என்று கூட விசாரிக்கத் தயக்கமும், மயக்கமும், தளர்ச்சியும், அயர்ச்சியும் உடையவர்களாக ஆகிவிட்டார்கள். எனவேதான், எனவேதான், எனவேதான், நம்மவர்களில் பெரும்பாலானவர்களுக்கு குருதேவராகிய யாமே, நேரடியாக கைப்பட அஞ்சல் எழுதுவதை நிறுத்திக் கொண்டு விட்டோம். இதை நம்மவர்களில் பலர் பலவிதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இவை பற்றி நீயும் ஓரளவு அறிவாய்!

நீ வீணுகி விடக் கூடாது! அண்ணன் தம்பி இருவரில் ஒருவன் ஏற்கனவே முழுநேர ஊழியஞக வந்து விட்டான். அந்தக் குறை மறைய வேண்டும், மாற வேண்டும், தேற வேண்டும் என்பதற்காகத்தான் உன்னை வழக்குரைஞருக்கு படிக்கச் செய்து உன் பெற்ருேரிடமே தங்கியிருக்கும்படி உனக்கு ஆணையிட்டோம். ஆனுல், எனக்கு நீயோ வீண் பாவங்கள் வந்து சேரும் வண்ணம் சிறுபிள்ளைத்தனமாகச் செயல்பட்டு இருக்கிருய். இது தவறு, தவறு, தவறு.

நீ உன் பெற்ருேருக்காகவும், இயக்கத்திற்காகவும் வழக்குரைஞராகச் செயல்பட்டேயாக வேண்டும். நீ வழக்குரைஞன் என்ற முறையில் அன்ருடம் பத்துப் பதினைந்து வியாபாரிகள், ஓட்டல் முதலாளிகள், விடுதி உரிமையாளர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள், புகைவண்டி நிலைய ஊழியர்கள், சிறு வியாபாரிகள், பெரும் வியாபார சங்கத்தார்கள், வங்கிக்காரர்கள், சீட்டுக் கம்பெனிக்காரர்கள், ஒலிபெருக்கி மின்சார விளக்குகள் வாடகைக்கு விடுபவர்கள், புகைப்படக் காரர்கள், கோயில் ஊழியர்கள், RSS, VHP, BJP, இந்து முன்னணி முதலிய இயக்கத்தவர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள், காவல் துறையினர், நீதிமன்றத் துறையினர், ... முதலிய அனைவரிடமும் அவ்வப்போது இந்துவேத முதல் புத்தகம், கடவுள் மொழி தெய்வமொழிப் புத்தகம், அன்ருடப் பூசைமொழிப் புத்தகம், சங்கராச்சாரியாரின் நூற்ருண்டு விழாப் புத்தகம், ... முதலியவற்ருேடு நமது அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் எடுத்துக் கொண்டு சந்திப்பதை உயிர் மூச்சாக, அன்ருடக் கடமையாகக் கொண்டிருந்தால் 6 மாத காலத்திற்குள் சேலம் மாநகரமே நமக்கு அறிமுகமாயிருக்கும்.

நீ ஈரோட்டிற்கோ, நாமக்கல்லுக்கோ செல்லத் தேவையில்லை. முதலில் சேலம் மாநகரமே உனக்குரியதாக ஆக்கிக் கொண்டிருக்கலாம். நீ, கிராமம் கிராமமாகச் செல்லத் தேவையில்லை. கிராமம், கிராமமாக

உன்னிடம் வரும். நீ ஒருவன் 'வழக்குரைஞர் தொழில் என்பதை எவருடன் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளக் கூடிய வசதி வாய்ப்புக்களும், ஆற்றலும் உடைய ஒரு மாபெரும் தொழில்'... அன்றாடம் அல்லது வாரத்தில் சில நாட்கள், கட்டாயமாக சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் வாசலில் நின்று மாற்று வேதத்தவர்கள் போல், வேற்று மதத்தவர்கள் போல்; நம்மை விளம்பரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலே போதும்; ... ... ... மாபெரும் வெற்றி! மாபெரும் வெற்றி! மாபெரும் வெற்றி! ........ இதற்கு மேல் உனக்குக் கூறத் தேவையில்லை.

4. அன்பு மகனே! யாம் எமக்கு அலுவலகத்திற்குச் செல்லுவதற்காக ஆண்டு தோறும் வெள்ளை வேட்டி வாங்கித் தருவதற்காக சிலரை நியமித்து இருக்கிறோம். இதைப் போலவே எமக்குச் சிவப்பு வேட்டி, எமக்கு மருந்து; எமது அலுவலகத்திற்குத் தேவையான தாள் எழுதுகோல் வாங்கித் தர; அன்றாடம் எம்மைத் தேடி வருபவர்களுக்கு சுவைநீர் தர, காப்பித் தூள், டீத்தூள், சீனி முதலியவை வாங்கித் தர; நமது திருமடத்திற்கு வருபவர்களுக்கு சாப்பாட்டிற்கு அரிசி, மளிகை முதலியவை வாங்கித் தர; காய்கறிகள் வாங்கித் தர; வெள்ளிக்கிழமை விரதத்திற்கு பொருள்கள் வாங்கித் தர; கருகுலத்தைப் பார்த்துக் கொள்ள; நமது அறிக்கைகள், புத்தகங்கள் அச்சிட; முடிகயிறுகள், தாயத்துக்கள் தயாரித்திட; எதிர்பாராத திடீர் செலவுகளுக்கு பண உதவி செய்ய; எமது அவசரச் செயல் திட்டங்களைச் செயலாக்கிட; யாம் ஆணையிட்டவுடன் சுற்றுப் பயணங்கள் சென்று வர, எமது இளவரசுகளைக் கவனித்துக் கொள்ள, ... என்று பல்வேறு துறைகளைப் பகுத்துப் பகுத்து உண்டாக்கி, **ஒவ்வொரு துறையையும் மூன்று நான்கு பேர்களுக்கு மேற்பட்ட சிலரிடம் ஒப்படைத்திருக்கிறோம், சிலரிடம் ஒப்படைத்திருக்கிறோம், சிலரிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதாவது, எந்த ஒரு துறையையும் எக்காரணம் பற்றியும் ஒரு தனிமனிதரிடம் ஒப்படைத்ததில்லை,** ஒப்படைக்க

வில்லை, ஒப்படைக்கவும் மாட்டோம். இதுதான் பீடாதிபதிகளின் செயல் ஒழுங்கு, மரபு, செயல் நெறி, செயல் முறை.

ஆனால், ஆனால், ஆனால், கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள சிறுசிறு பதுமைகள், அதாவது பொம்மைகள் தாங்கள்தான் கோபுரத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாக மனப்பால் குடிப்பது போல், நம்மவர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவு கணிசமானவர்கள் “தாங்கள்தான் குருதேவரையும், பதினெண்சித்தர் மடத்தையும், பீடத்தையும், இ.ம.இ.யையும், இ.மு.க.வையும், அ.வி.தி.யையும், இ.இ.க. (இந்து இலக்கியக் கழகம்)வையும், மற்ற அனைத்தையும் பாதுகாப்பதாகவும்; தாங்கள் இல்லாவிட்டால், அதாவது தாங்கள் செயல்படா விட்டால் அனைத்துமே தேங்கிவிடும், தேங்கிவிடும், தேங்கி விடும்; அதனால், அதன்பிறகு, அனைவருமே குருதேவர் முதல் தன்னை நாடி வந்து, தன்னைத் தேடி வந்து, தன்னை மதித்து, தன்னை வற்புறுத்தி, தன்னைத் தலைமை தாங்கி செயல்படச் சொல்லுவார்கள்! தன்னைத் தலைமை தாங்கிச் செயல்படச் சொல்லுவார்கள்!! தன்னைத் தலைமை தாங்கிச் செயல்படச் சொல்லுவார்கள்!!! என்று,! என்று!, என்று! மனப்பால் குடிக்கிறார்கள்! மனப்பால் குடிக்கிறார்கள்! மனப்பால் குடிக்கிறார்கள்! மனப்பால் குடித்தார்கள்! மனப்பால் குடித்தார்கள்! மனப்பால் குடித்தார்கள்!

இப்படிப் பட்டவர்கள்தான், இப்படிப் பட்டவர்கள்தான், இப்படிப் பட்டவர்கள்தான், நமது மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், மதத்துக்கும், பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும், வரலாற்றுப் பெருமைகளுக்கும், இலக்கிய வளங்களுக்கும் விடிவு ஏற்பட முடியாமல் தடையாக இருக்கின்ற எதிரிகளையும், பகைவர்களையும் விட ஆபத்தானவர்கள், ஆபத்தானவர்கள், ஆபத்தானவர்கள். ஆனால், ஆனால், ஆனால், இவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவிகள்! அப்பாவிகள்! அப்பாவிகள்! மூடர்கள்! மூடர்கள்! மூடர்கள்!

முட்டாள்கள்! முட்டாள்கள்! முட்டாள்கள்! மட்டிகள்! மட்டிகள்! மட்டிகள்! மடையர்கள்! மடையர்கள்! மடையர்கள்!

எனவேதான், எனவேதான், எனவேதான், எமது 18 ஆண்டுக்காலப் பயிற்சிக் காலங்களிலும், எமது 18 ஆண்டுக்கால முயற்சிக் காலங்களிலும், எமது 18 ஆண்டுக்கால தேர்ச்சிக் காலங்களிலும் (இல்லறம்) எம்மால் தயாரிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எம்மால் தண்டிக்கப்பட்டும், கண்டிக்கப்பட்டும், தூக்கி எறியப்பட்டும் விட்டார்கள். அதாவது வருங்கால வரலாறு எம்மைப் பார்த்து “ஆண்டிக்கு வாய்த்தவை அனைத்தும் கூன், குருடு, நொண்டி, முடம், பித்துக்குளி” என்று விமர்சித்து விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு யாம் செயல்படுகிறோம்.

ஏனென்றால், எம்மை வளர்த்தது ஒரு பகுத்தறிவுச் சிங்கம்; சிந்தனைச் சிற்பி, அறிவியல் மேதை, ஈடு இணையற்ற இலக்கியப் பெரும்புலவர், வரலாற்று வல்லுநர், தத்துவ வித்தகர், செயல் சித்தாந்தச் செம்மல், மாபெரும் சீர்திருத்த மகாவீரர், அரசியல் வித்தகர், இத்திருநாட்டின் உயிர் நாடியான தலைவர்கள் அனைவரின் நாடியைப் பிடித்துப் பார்த்தவர். அவரே, “மகனே! நீ ஓர் உலக வரலாறாக வளர வேண்டும், வாழ வேண்டும்! வளர வேண்டும், வாழ வேண்டும்! வளர வேண்டும், வாழ வேண்டும்! மகனே! உன்னுடைய வாழ்க்கை ஒரு தெய்வீகச் சோதனையாக நிகழ்ந்தது! நிகழ்ந்து வருகிறது! நிகழ்த்தப் படுகிறது! நிகழ்த்தப் படும்! ... என்பதை எப்பொழுதுமே அறிவு விழித்த நிலையில் உணர்ந்து உணர்ந்து செயல்படு, உணர்ந்து உணர்ந்து செயல்படு, உணர்ந்து உணர்ந்து செயல்படு. மகனே! நீ உன்னுடைய ஏட்டறிவையும், பட்டறிவையும் உன்னால் முடிந்தவரை முழுமையாக எழுது. உன்னைச் சந்திக்கின்ற அனைவரிடமும் உன்னைப் பற்றி முழுமையாகக் கூறு; ... ஆனால், ஆனால், ஆனால், யாருடைய உதவியையோ, துணையையோ, பாதுகாப்பையோ,

அன்பையோ ... எதிர்பார்த்து எந்தவொரு செயலையும் செய்யாதே." என்று வகைவகையாக அறிவுரைகளை மிகமிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வழங்கிச் சென்றிருக்கிறார், வழங்கிச் சென்றிருக்கிறார், வழங்கிச் சென்றிருக்கிறார்.

எனவேதான், எனவேதான், எனவேதான் யாம், எம்மால் சிறப்பாக உருவாக்கப்பட்டு எம்மோடு எம் அருகிலேயே பல ஆண்டுகள் மிகமிக நெருங்கி வாழ்ந்தவர்களில் கூட மூன்றே முறை எச்சரிக்கை கொடுத்து, அதற்குள் அவர்கள் திருந்தாவிட்டால், அவர்களுக்கு எழுத்துப் பூர்வமாக, முறைப்படி விளக்கங்கள் கேட்டு அஞ்சல் விடுத்து; அதன்பிறகும் அவர்கள் திருந்தாவிட்டால் அவர்களோடு உள்ள அனைத்துவகைத் தொடர்புகளையும் முழுமையாக அகற்றி; அவர்களை துறந்தும், மறந்தும் செயல்படுகிறோம், செயல்படுகிறோம், செயல்படுகிறோம். இதை நீ அநேகமாக அநுபவப் பூர்வமாக பலமுறை உணர்ந்து இருக்கிறாய்; பலமுறை உணர்ந்து இருக்கிறாய்; பலமுறை உணர்ந்து இருக்கிறாய். இருந்தும் நீயே உணர்வு வயப்பட்டு, அவசரப்பட்டு ஒருசில சொற்றொடர்களை பதற்றத்தோடு தொலைபேசியில் கூறிவிட்டாய். இனியும் இப்படிச் செயல்படாதே! நீ எந்தவிதமான கண்டிப்பையோ, தண்டிப்பையோ இன்னும் பெறவில்லை என்ற பேருண்மைகளை புரிந்து நம்பி, எப்பொழுதும் போல் எமது வாரிசாக, எமது நம்பிக்கைக்குரிய ஏற்புச் செல்வனாக, அடியானாகச் செயல்படு. செயல்படு, செயல்படு. முடிந்தால் **உடனடியாக நேரில் பொன்னேரி வந்து சிந்தித்திடு.**

5. அன்பு மகனே! நம்மில் பலர் நம்மவர்களுக்குள் ஏழைகள் அதிகமாக இருப்பதாக எண்ணுகிறார்கள். ஆனால், உண்மை அது அல்ல. நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் அவரவருடைய பொருளாதார வசதி வாய்ப்புகளுக்கேற்ப மனச்சாட்சிப் படி குருபீடத்திற்காக செலவு செய்யத் தயங்கி, மயங்கி, கலங்கி,

குழம்பி, ஏங்கி, தேங்கி, கை பிசைந்து, வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருக்கும் கோழைகளே! கோழைகளே! கோழைகளே! ஆவார்கள். ஆவார்கள், ஆவார்கள்.

ஏனென்றால், யாம், ஆயிரமாயிரம் முறை "அன்பு மகன்களே, யாரும் எமக்காகத் தங்கள் வசதி வாய்ப்புக்களை மீறிப் பூசை செலவு செய்து விட்டுத் தமது வேலைகளையோ, கடமைகளையோ, பணிகளையோ, அலுவல்களையோ, பொறுப்புக்களையோ புறக்கணிக்கத் தேவையில்லை. மறக்கடிக்கத் தேவையில்லை; புறக்கணிக்கத் தேவையில்லை. மறக்கடிக்கத் தேவையில்லை; புறக்கணிக்கத் தேவையில்லை. மறக்கடிக்கத் தேவையில்லை. அதாவது யாராக இருந்தாலும் சரி, அவர்கள் நமது கொள்கைகளுக்காகவும், குறிக்கோள்களுக்காகவும், செயல்திட்டங்களுக்காகவும், நிறுவன நிர்வாகங்களுக்காகவும் தங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் வராத வகையில் தங்களால் இயன்ற பொருளுதவியையோ, அல்லது உடலுழைப்பையோ வழங்கினால் போதும்" என்றுதான் கூறி வருகிறோம், என்றுதான் கூறி வருகிறோம், என்றுதான் கூறி வருகிறோம், என்றுதான் தொடர்ந்து கூறி வருகிறோம். ஆனால், ஆனால், ஆனால், ஏறத்தாழ எல்லோருமே தவறு செய்கிறார்கள், தவறு செய்கிறார்கள், தவறு செய்கிறார்கள்.

எனவேதான், எனவேதான், எனவேதான், யாம், அண்மைக் காலங்களில் எம்முடைய அனைத்து வகையான சுற்றுப்பயணத் திட்டங்களையும் அப்படியப்படியே நிறுத்தி விட்டோம், அப்படியப்படியே நிறுத்தி விட்டோம், அப்படியப்படியே நிறுத்தி விட்டோம். அதன்மூலம், எம்முடைய பெரும்பாலான பொழுதையும், முயற்சியையும் இருக்கு வேதம், அசுர வேதம், சாம வேதம், அதர்வான வேதம் எனும் நான்கு வேதங்களிலிருந்தும் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் எடுத்து எழுதி தனித்தனி நூல்களாக அச்சிடும் செயல்திட்டத்தைச் செயலாக்கி வருகிறோம். நம்மவர்களுக்கும், இந்துவேத மாநாட்டில்

வெளியிட்ட இந்துவேதம் முதல் பகுதியினையும், அன்றுடப் பூசைமொழியில் உள்ள இந்து வேத, இந்து மதக் குறிப்புகளையும், இப்பொழுது வெளியிட்டுள்ள சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழா மலரையும்; அடிக்கடி திருப்பித் திருப்பி, திருப்பித் திருப்பி, திருப்பித் திருப்பிப் படித்து மனப்பாடம் செய்து கொள்ளும்படி அறிவிப்புக்களை வழங்கி வருகிறோம்.

அதாவது, நம்மிடம் உள்ளவர்கள், இந்த மூன்று புத்தகங்களை மட்டுமாவது முழுமையாகப் படித்து மனப்பாடம் செய்து கொண்டவர்களாகத் தயாராக வேண்டும். அப்பொழுதுதான், அப்பொழுதுதான், அப்பொழுதுதான், முதலில், முதலில், முதலில் நம்மவர்க்கெல்லாம் நமது நிறுவன நிர்வாகங்களில் நம்பிக்கையும், நமது கொள்கையில் தெளிவும், நமது குறிக்கோள்களில் பிடிப்பும், நமது செயல்பாடுகளில் கட்டுப்பாடும்; நம்மவர்களுக்கிடையில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், மரியாதையும், உண்மையான தோழமையும் ... உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும்.

இதற்கு மேல்தான் நம்மவர்கள் ஆங்காங்கே வட்டார வட்டாரமாக அல்லது வட்டம் வட்டமாக அல்லது மாவட்டம் மாவட்டமாக, அல்லது மண்டலம் மண்டலமாக தனித்தனியாக சிறுசிறு கூட்டங்களாகக் கூட்டி அவர்களோடு கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்குகள் (கருத்துப் பரிமாற்ற கலந்துரையாடல்கள்) நிகழ்த்திட விரும்புகிறோம், நிகழ்த்திட விரும்புகிறோம், நிகழ்த்திட விரும்புகிறோம். இம்மாபெரும் செயல்திட்டத்திற்காக இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு நம்மவர்கள் அனைவரும் தங்கள் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் உள்ள அநாவசியச் செலவுகளை மட்டும் குறைத்துக் கொண்டோ அல்லது நிறுத்திக் கொண்டோ, அநாவசியச் செலவுகளை மட்டும் குறைத்துக் கொண்டோ அல்லது நிறுத்திக் கொண்டோ, அநாவசியச் செலவுகளை மட்டும் குறைத்துக் கொண்டோ அல்லது நிறுத்திக் கொண்டோ

மாதம் தவருமல் அல்லது அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்பத் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட தொகையை பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளே, மாநில வங்கி, பொன்னேரிக்கு (Pathinen Siddhar Madam Trust, State Bank of India, Payable at Ponneri) அனுப்பி வைத்தால் போதும், அனுப்பி வைத்தால் போதும், அனுப்பி வைத்தால் போதும்.

இத்துடன் பல்வேறு பாதிப்புக்களால் தொல்லேப்படும் மக்களுக்கு உதவி செய்யும் வண்ணம் பாதிக்கப் பட்டவர்களுடைய கைரேகை, அல்லது புகைப்படம் அல்லது குடும்பத்தார் விவரங்கள் முதலியவற்ருேடு ரூ.25/- காணிக்கையாகப் பெற்று பதினெண்சித்தர் மடத்திற்கு அனுப்பிஞல்; மடத்தின் தொண்டும் விரிவடையும், மக்கள் தொடர்பும் விரிவடையும். மேலும் இதுவரை பதினெண்சித்தர் மடம் அச்சிட்டு வைத்திருக்கக் கூடிய நூல்களேயும், குருதேவர் அறிக்கைகளேயும், மாதம் தோறும் வெளிவரும் 'இந்து ஆரணம்' இதழையும் நம்மவர்கள் பெருமுயற்சி எடுத்து அவரவர் வட்டாரங்களில் உள்ள சிறிய பெரிய கடைகளில் எல்லோரும் காணுமாறு தொங்க விட்டு விற்பனே செய்திட முற்படல் வேண்டும், விற்பனே செய்திட முற்படல் வேண்டும், விற்பனே செய்திட முற்படல் வேண்டும். அதன்மூலம், பதினெண்சித்தர் மடமும் அறிமுகமாகிடும்; பதினெண்சித்தர் மடத்திற்கு தேவையான பொருள்களும் கிடைத்திடும். இவைதான், இவைதான், இவைதான் இன்றைய நமது செயல்திட்டங்கள், இன்றைய நமது செயல்திட்டங்கள், இன்றைய நமது செயல்திட்டங்கள்.

6. அன்பு மகனே! நமது வரலாற்றில் உன் பெயர் நிலேத்திடும் வண்ணம் உனக்கு எழுதப்பட்டுள்ள இந்த அஞ்சல் எமது **58வது பிறந்த நாள் விழா அறிவிப்பு** அஞ்சலாக வழங்கப்படுகிறது, வழங்கப்படுகிறது, வழங்கப்படுகிறது. எனவே, எனவே, எனவே, இதற்குக் கையெழுத்து நகல்களாகவோ, அல்லது நகல் எடுக்கும்

இயந்திரத்தின் நகல்களாகவோ உன்னால் முடிந்தவரை பல நகல்கள் எடுத்து உடனுக்குடன் தலைமைப்பீடம் அனுப்பி வை. அவை தலைமைப்பீடத்திலிருந்து பலருக்கும் அனுப்பப்படும். இந்த அஞ்சல் கட்டாயமாக நம்மவர்களுக்கிடையில் புரையோடிய புண்களை உடையவர்களுக்கு அரிய மருந்தாகிடும். அதாவது, யாருமே அரைகுறை மனத்தோடு, தயக்க மயக்கத்தோடு, தேக்க தளர்ச்சியோடு ... நமது அமைப்புக்களில் இருக்கத் தேவையில்லை, இருக்கத் தேவையில்லை, இருக்கத் தேவையில்லை, இருக்கத் தேவையேயில்லை; இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

உடன் பதில்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

உன் **அன்பு ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
**தலைவர் குருதேவர்.**
1-10-1993.

திருவோலை நாயகம்:

இ.ம.இ., இ.மு.க. இணைப்பொதுச் செயலாளர்,
சித்தர் அம்பலக் கூத்தர் இரா.சீனிவாசன்.

**//உண்மை நகல்//**
**//மூல நகல்: சித்தர் முத்தீசர் திரு வெ.செகதீசன் அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

வைகாசிப் பருவ பூசை விழா;
உண்மையான **இந்துமத ஞானம் வழங்கு** திருவிழா;
இந்து மறுமலர்ச்சி விழா; தமிழ் கூறும் நல்லுலக விழா;
அருள்நெறியாளர்கள் எழுச்சி விழா; ஆத்தாளை அழைத்துப் பூசிக்கும் விழா;
சமுதாயப் புரட்சி விழா; பண்பாட்டு வளர்ச்சி விழா;
கண்டவர் விண்டிடும் விழா; விண்டதைப் பிறர் காணச்செய்திடும் விழா;
அகவிருள் அகற்றும் விழா; புறவிருள் போக்கும் விழா;
நாட்டுக்கு நலமளிக்கும் விழா; மதங்களை இணைத்திடும் விழா;
அருளாட்சி அறிவிப்பு விழா; அருளாட்சி அமைப்பு விழா;

# அருளாட்சி அழைப்பு விழா

பதினெண்சித்தர்கள் மணீசர்களை [ மண் + ஈசர் => மண்ணுலக உயிரினங்களின் தலைவர்கள் ] மேம்படுத்திப் பண்பாடும், நாகரிகமும் பெற்று மனிதர்களாக்கிடத் [ மனதை உடையவர் = அகப்பண்பாடு + புறநாகரிகம் ] தங்களுடைய விண்வெளி மதமான 'இந்து மதத்தை'த் தங்களின் தாய்மொழியான தமிழில் வழங்கினார்கள். அம்மதம் கிரேதாயுகம் 17,28,000 ஆண்டுகள் + திரேதாயுகம் 12,96,000 ஆண்டுகள் + துவாபரயுகம் 8,64,000 ஆண்டுகள் + கலியுகம் 5,126 ஆண்டுகள் [*2025 ஆம் ஆண்டில்*] ... என்று 38,93,125 ஆண்டுகள் வாழ்ந்து வளர்ந்து மானுடரைக் காத்து வந்திருக்கிறது.

இவ்வளவு பெரிய, நெடிய, நீண்ட ... இடைவெளிக் காலத்தில் மனித மறதியால், கற்பனையால், கனவால், சூழ்ச்சியால், தன்னலத்தால், வெறியால்,... சில தேவையற்ற, பயனற்ற மடமைகள் இந்துமதத்தில் தோன்றி விட்டன. அவற்றையும் அகற்றித் தூய்மைப்படுத்தி இந்து மதத்தை உலக மானுடர் உய்வு நெறியாக ஆக்கும் பணியை **பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இந்து மதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்** அவர்கள் துவக்கியுள்ளார்கள். இவருக்கு முன் பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இப்பணியை அவ்வக் காலங்களுக்கேற்பச் செய்துள்ளனர். இவருக்குப் பின் தேவைக்கேற்ப முப்பத்தாறு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி, அவ்வக்காலங்களுக்கேற்ற மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்வர். எனவே, மானுட இனம் இம்மண்ணுலகில் வாழப் போகும் கலியுக முடிவு வரை (*2025ஆம் ஆண்டுக் கணக்கின்படி*) 4,26,874 ஆண்டுக்காலம் முழுவதும் 36 பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் இந்து மதம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு, மறுமலர்ச்சி செய்யப்பட்டு மானுடரை உய்வுபடுத்தும் நெறியாகவே இருக்கும்.

**மதவழியே இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் மித இத வழி!**
**இந்து மதமே தமிழின மொழி நாட்டுப் பற்றைச்**
**செயல்நிலைப் படுத்தும்!**
**மனிதர்களை மனிதர்களாக்கும் சித்தர் நெறியே**
**உண்மையான இந்துமதம்!**
**காயந்திரி மந்தரத்தால் தன்னையறிந்து தலைவனைத் தெரியலாம்!**
**கலசப்பூசையால் தலைவனையறிந்து தன்னைத் தெரியலாம்!**
**குண்டலினிப் பயிற்சியால் குருவையறிந்து திருவைப் புரியலாம்!**
**பிருணயாமத்தால் பிண்டம் அண்டம் அறிந்து வெல்லலாம்!**

***- குருவாக்கு***

**ஊனநிலை ஒழித்து மெய்ஞ்ஞான நிலை பெற்றிடவே**
**கானகமும் வானகமும் வாழக் கற்றிடு குருவிடமே!**
**ஆனதற்கும் போனதற்கும் புலம்பிடாதே!**

***- குருபாரம்பரியம்***

**இந்து மதத்தின் மறுமலர்ச்சியே மானுடச் செழுச்சி!**
**இந்து மதச் செழுச்சியே உலகப் பொதுவுடமை வளர்ச்சி!**
**இந்து மத உயர்ச்சி உலகச் சமத்துவ ஆட்சி!**
**இந்து மத உணர்ச்சி இனவிடுதலை மீட்சி!**
**இந்து மதப் பயிற்சி சுரண்டுவோர் சூழ்ச்சிக்கு வீழ்ச்சி!**
**இந்து மதமே உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டைத் தரும்!**
**இந்து மதமே அனைத்தையும் கடவுளாக்கும் ஆற்றலுடையது!**
**இந்து மதமே உலகச் சமூக விஞ்ஞானம்!**
**இந்து மதமே பகுத்தறிவின் தாய்!**
**இந்து மதமே தன்னையும் பின்னையும் முன்னையும் உணர்த்தும்!**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**
**கடவுளை வழிபடுவோர் கழகம்**
**அருளுலக ஆர்வலர் கழகம்**
**உலக அருளாளர் திருச்சபை**
**உலக மத ஆய்வுக் குழு**

**// மூலம்: அச்சிட்ட அறிவிக்கை. //**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

## “அருட்போர் என்பது”

“அருட்போர் என்பது அருளுலகத்தில் உள்ள இருள்களை, தவறான கற்பனைகளை, ... கண்மூடிப் போக்குகளை... ; நாத்திகத்தின் பேராலும், பகுத்தறிவின் பேராலும், சீர்திருத்தத்தின் பேராலும் சுயநல வெறியர்கள் செய்கின்ற இந்துவேத, இந்துமதத் துரோக விரோதச் செயல்களை; முறையான இந்துவேத, இந்துமத ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாமையால் விளைகின்ற இந்துமதப் போலி வாழ்வியல்களை; சாதி சமய ஏற்றத்தாழ்வு வெறிகளாலும், தீண்டாமைக் கொடுமைகளாலும் இந்துக்களிடையே ஏற்பட்டிட்ட ஒற்றுமையின்மைகளை, போட்டாப் போட்டிகளை; சண்டை சச்சரவுகளை, ...; ... எல்லாம் அகற்றுவதற்காக; இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்!... நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்!...”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-